**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 4

Name : பபி கிளாடிஸ்

S/o, D/o, W/o : சிலுவை மணி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 29.10.2025

Accused Present.

முதல் விசாரணை–

நான் வள்ளியூரில் வசித்து வருகிறேன். இல்லதரசியாக இருக்கிறேன். இறந்து போன ஸ்டான்லி எனது தம்பி. 12.12.2021ம் தேதி சுரேன் எனது தம்பியை பார்ப்பதற்காக வீட்டிற்கு சென்றுள்ளார். என் அப்பா எதற்காக வந்துள்ளாய் என்று சுரேனை கேட்டதால் எதிரி என் அப்பாவை அடித்துள்ளார். என் தம்பி அறையில் படுத்து தூங்கி கொண்டுள்ளான். எதிரி என் அப்பாவை அடிப்பதற்கு முன்பு வந்தாரா அடிப்பதற்கு பிறகு வந்தாரா என்று எனக்குத் தெரியாது. எதிரி செங்கல், கம்பி ஆகியவற்றை வீட்டிற்குள் எடுத்து போட்டுள்ளார். என் தம்பியும், எதிரியும் எனது தம்பிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எங்கோ வெளியே சென்றுள்ளார்கள். என் தம்பி இரவு வீட்டிற்கு வரவில்லை என்று என் அம்மா எனக்கு போண் செய்து பேசினார். நான் என் தம்பிக்கு

போன் செய்து பார்த்தேன் போண் போகவில்லை. மறுநாள் காலை 05.30 மணிக்கு என் தம்பி வீட்டிற்கு வந்துள்ளார். என் அம்மாவிடம் எதிரி என்னை மிகவும் கஷ்டப்படுத்திவிட்டான் என்றும் எனவே அவன் வீட்டில் சென்று கேட்கும் படி கூறியுள்ளார். என் அம்மா சென்று கேட்டதற்கு எதிரி என் அம்மாவையும் திட்டியுள்ளார். எனது போனை வாங்கி வருகிறேன் என்று சொல்லி என் தம்பி 08.00 மணியளவில் வெளியே சென்றுள்ளான். வெளியே போனவன் வீட்டிற்கு வரவில்லை இந்நிலையில் என் தம்பி எனக்கு போண் செய்தான். சுரேன் என்னை மிகவும் அவமானப்படுத்திவிட்டதால் நான் சாகபோகிறேன், என்று சொன்னான். என்னிடம் பேசும்போதே சாக போகிறேன் என்று சொல்லி பேசினார். ஆனைபாறையில் இருக்கிறேன் என்று சொன்னான். நான் என் தம்பியை தேடி ஊருக்கு வந்தேன். என் அம்மாவும், நானும் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க போனோம். குலசேகரம் காவல்நிலையத்தில் இரவு புகார் கொடுத்தோம் மறுநாள் காலை 03.30 மணிக்கு பால்வெட்டும் நபர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என் அப்பாவை கூட்டி சென்றார்கள். என் தம்பி இறந்து போன தகவல் அதன் பிறகு தான் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

இறந்துபோன ஸ்டான்லி எனது உடன் பிறந்த தம்பி இல்லை. எனக்கு 2009ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததில் இருந்து நான் வள்ளியூரில் வசித்து வருகிறேன். ஏதாவது விசேஷம் என்றால் எனது பெற்றோர் வீட்டிற்கு வருவேன். என் தம்பிக்கு போண் செய்தேன் ஆனால் போண் போகவில்லை என்ற விபரத்தை நான் போலீசாரிடம் சென்னேனா

என்று ஞாபகமில்லை. எனது தாயார் 13.12.2021ம தேதி சுரேன் வீட்டிற்கு சென்று கேட்டார் என்ற விபரத்தை நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. எதிரியும், என் தம்பியும் பல வருடங்களாக நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். என் தம்பி எதிரி வீட்டிற்கு செல்வதும், எதிரி எங்கள் வீட்டிற்கு வருவதும் சகஜம் தான். சண்டை நடந்த மறுநாள் என் தம்பி என்னிடம் போனில் அரை மணி நேரம் பேசியிருப்பார். போனில் அப்போது மாத்திரை சாப்பிட்டதாக என்னிடம் சொன்னார். கரிச்சபாறையில் இருப்பதாக என்னிடம் சொன்னான். தம்பி மாத்திரை சாப்பிட்டதும் தெரிந்த உடன் நான் கிளம்பி வந்தேன். நான் வள்ளியூரிலிருந்து எங்கள் ஊருக்கு வரும் போது மாலை 06.00 மணி இருக்கும். 13.12.2021ம் தேதி மாத்திரை சாப்பிட்டதாக சொன்ன பிறகு தான் ஊருக்கு வந்தேன். கரிச்சபாறையில் சென்று தேடினீர்களா என்றால் அந்த இடம் யாருக்கும் தெரியவில்லை. போலீசாரிடம் சொல்லி தேடலாம் என்று காவல்நிலையத்திற்கு போனோம். காவல்நிலையம் செல்லும் போது 13.12.2021ம் தேதி இரவு 07.00 மணி இருக்கும். எழுத்துமூலம் புகார் கொடுக்க சொல்லி போலீசார் கேட்டார்கள். நாங்கள் எழுதி கொடுத்தோம். புகாரை என் அம்மா எழுதினார். என் அம்மா கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என் தம்பி வந்து விடுவான் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விட்டு அப்பா வீட்டிற்கு வரும் போது இரவு 09.00 மணி இருக்கும். அன்று இரவு நான் எனது அப்பா வீட்டில் தான் தங்கினேன். நான் வள்ளியூரிலிருந்து எனது அப்பா வீட்டிற்கு வரும் போது என்னுடன் என் கணவரும் வந்தார். என் தம்பி இறந்த செய்தி தெரியும் போது நான்

என் அப்பா வீட்டில் தான் இருந்தேன். என் தம்பிக்கு குடி பழக்கம் உண்டு. என் அப்பாவிற்கு சொத்துக்கள் கிடையாது வீடு மட்டும் உண்டு. வீட்டை என் தம்பிக்கு தராமல் எனக்கு தரவேண்டும் என்று பெற்றோர் முடிவு எடுத்தார்கள் என்றால் இல்லை. என் தம்பி குடித்து விட்டு வரும் போது என் அப்பாவிற்கும், தம்பிக்கும் பிரச்சனை வரும் என்றால் சரிதான். போலீசார் என் தம்பி இறந்த பிறகும் என்னை விசாரித்தார்கள். இறந்த அன்று மதியம் விசாரித்தார்கள். எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து சண்டை போட்ட பிறகு எதிரி என் தம்பியை சமாதானம் செய்து வெளியே சென்றதாக போலீசாரிடம் கூறினேனா என்றால் ஞாபகமில்லை. நான் தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை நான் போலீசாரிடமும் சொன்னேன். தம்பியின் மீதுள்ள பாசத்தில் நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடைசியாக என் தம்பி எதிரியுடன் சென்றதால் எதிரி மீது தான் எனக்கு சந்தேகம்.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 352 /2023**

**Deposition of P.W.5**

Name : செல்வன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 29.10.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் வாழையத்து வயலில் வசித்து வருகிறேன் மீன்வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 பாலன் எனதுஅண்ணன். அ.சா.2 தங்கம் எனது அண்ணி. இறந்து போன ஸ்டாலின் எனது மகன் முறை வேண்டும். ஆஜர் எதிரியை தெரியும். எனதுஅண்ணன் வீடு குலசேகரத்தில் உள்ளது. எனது அண்ணன் மகனும், எதிரியும் நண்பர்களாக தான் இருந்தார்கள். அவர்களுக்குள் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மொபைல் தொடர்பாக எதிரிக்கும், அண்ணன் மகனுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. அது தொடர்பாக என் அண்ணி கேட்க சென்றுள்ளார். அப்போது எதிரி கெட்டவார்த்தைகள் பேசி திட்டியுள்ளார். கேவலமாக எதிரி திட்டியதால் ஸ்டான்லி மனநிலை சரியில்லாமல ஆகி விட்டார். அதுபோக எதிரி என்

அண்ணன் வீட்டிற்கும் வந்து தகராறு செய்துள்ளார். செங்கலை கொண்டு எறிந்துள்ளார். கடப்பாறையாலும் வீட்டிற்குள் போட்டுள்ளார். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது அண்ணன் வீட்டிற்கும், என் வீட்டிற்கும் இடையே 15 கி.மீ தூரம் இருக்கும். எதிரிக்கும், என் அண்ணன் மகனுக்கும் மொகைல் தொடர்பாக பிரச்சனை இருந்த விபரத்தை என் அண்ணன் தான் என்னிடம் சொன்னார். என் அண்ணி செல்போனை கேட்க தான் போனார். இந்த பிரச்சனை 3 நாட்களாக நடந்தது. நான் சாட்சியத்தில் சொன்ன விபரங்கள் என் அண்ணன் சொல்லி தான் எனக்குத் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலீசாரிடமும் சொன்னேன். இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.